**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

**அசல் வழக்கு எண்: 255 /2019** வா.சா.2

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14ம் நாள் செவ்வாய்க்கிழமை வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்து வைக்கப்பட்டது.

**பெயர் : மோகனதாஸ் தந்தை/கணவர் பெயர்: கைலாசம்**

---

**14.10.2025 : பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனது நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 7 இலக்க சொத்துகளின் பரப்பு, விஸ்தீரணம் சர்வே எண், பட்டா எண் பற்றி தெரியாது. 7 இலக்க சொத்துகள் எந்தெந்த இடத்தில் உள்ளது என்றால் சொல்லமுடியாது. மேற்படி சொத்துகளை யார் யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் வாதி, பி.வாதி அனுபவம்செய்து வருகிறார்கள். வாதியின் தகப்பனாரும், பி.வாதியின் தகப்பனாரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால்சரிதான். மேற்படி இருவரும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பாகபிரிவினை செய்து கொள்ளவில்லை. ஆனால் சொத்துகளை தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள். 4வது இலக்க சொத்தை சரிபாதியாக பிரித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். காவேரி பெயரியண்ணன் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை 7 முதல் 11 பி.வாதிகளுக்கு பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது. எனக்கு வழக்கு பற்றி தெரியாது என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பி.வாதிக்கு கருணாநிதி என்ற உடன்பிறந்த சகோதரர் உள்ளார் என்றால்சரிதான். அவருக்கு சொத்தில் பாகம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

கு.வி முடிவுற்றது.